**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 1,2 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை.3ம் பிரதிவாதி ஆஜர்.வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண். 1128/2022

பி.வா.சா.1 செல்வி க/பெ சதாசிவம்

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:–</u>

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து காலியிடம் ஆகும். தாவா சொத்தை எப்போது கிரையம் வாங்கினீர்கள் என்றால் 08.05.2003 அன்றையே தேதியில் கிரையம் வாங்கினோம். தாவா சொத்து எந்த 4 எல்லைக்குள் அமைந்துள்ளது என்றால் 30 அடி கிழமேல் ரோடுக்கு வடக்கு, 36 சைட்டுக்கு மேற்கு, 37,38சைட்டுகளுக்கு எங்களுடைய காலியிடம் ஆகும். 39சைட்டுக்கு கிழக்கு, 44,45சைட்டுகளுக்கு தெற்கு.

2. தாவா சொத்தை அனுபவித்து வருவதற்க்கு எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா சொத்துக்களை வாங்குவதற்க்கு வருமானம் உண்டு என்பதற்க்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் ஆவணங்கள் உள்ளது அவசியம் ஏற்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.